# கிருபையுள்ள வார்த்தை

# KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 18 | October அக்டோபர் | 2017
ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




## கர்நாடக மாநிலம் சிக்கபானவாராவில் நமது J.C. ஆத்தும ஆதாய பள்ளியில் பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்ற 27 மாணவர்கள்

**10th GRADUATION PROGRAM - J.C. SCHOOL OF EVANGELISM @ KARNATAKA**

கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| மாய்மாலான வாழ்வு | 3 |
| வேதாகம உடன்படிக்கை | 6 |
| தனிநபர் வேதஆராய்ச்சி | 9 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. சியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை
**6** மணி முதல் **6-30** மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.











Advanced Bible Correspondence Courses Available in English.

For Details:
**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**
P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu


**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை உண்மையுள்ளவர்களாக
உருவாக்கும்
உன்னதமானவரின் வார்த்தை


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India






NEW VOLUME OF
**VOICE OF TRUTH INTL**
**(VOL. 93)**
**AVAILABLE**

# மாய்மாலான வாழ்வு

P.C. பிலேமோன் ராஜா



அன்பானவர்களே! நேற்றும் இன்றும் என்றும் மாற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சர்வவல்லமையுள்ள நாமத்தினாலே எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

ஆண்டவர் இயேசு தனது மலைப்பிரசங்கத்தில் மாய்மாலான வாழ்க்கை வாழ்ந்த யூதமத தலைவர்களையும், முன்னோடிகளையும் கடிந்து பேசுகிறதை **மத்தேயு 7: 1–5** வசனங்களில் நாம் வாசிக்க முடியும். இந்த மாய்மால வாழ்வு எப்படிப்பட்டது என்பதையும், ஆண்டவர் வாழ்ந்து காண்பித்த, மற்றும் அவரை விசுவாசிக்கிற நாமும் வாழும்படியாக விரும்புகிற வாழ்வை பற்றியும் அறிய முயலுவோம்.

### 1) மாய்மாலம் என்றால் என்ன?

**மத்தேயு 7:5** “மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு: பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.” ஆண்டவர் யூதமத முன்னோடிகளை மாயக்காரனே என சாடுகிறார். இதன் பொருள் ‘நடிப்பவர்’, ‘பாசங்கு செய்பவர்’ , ‘போலியானவர்’ மற்றும் ‘ஏமாற்றுபவர்’ என அர்த்தப்படுகிறது. இது உண்மையற்ற, நேர்மையற்ற, தரமற்ற வாழ்வாக உள்ளது.

### 2) மாய்மாலத்தின் நான்கு தன்மைகள்

சிறையிருப்பிலிருந்து மீந்து வந்த யூத மக்களின் மாய்மாலமான வாழ்வை மல்கியா தீர்க்கத்தரிசி தத்ரூபமாக நமக்கு வெளிப்படுத்துகிறார். **மல்கியா 2 : 9–13** வரை உள்ள வசனப்பகுதியில் நாம் அதை வாசிக்க முடியும்.

அ) யூதர்களின் மாய்மாலம், அவர்களது ஆவிக்குரிய புரிதலை (அல்லது) தவறை மூடி மறைத்தது. **மல்கியா 2:9** “நீங்கள் என் வழிகளைக் கைகொள்ளாமல் வேதத்தைக்குறித்துப் பட்சபாதம் பண்ணினபடியினால் நானும் உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் அற்பரும் நீசருமாக்கினேன்.”

யூதர்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாவில்லை, இப்படிபட்ட அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வின் நிலைபற்றிய சரியான புரிதலுமின்றி, தங்கள் தவறை (கீழ்படியாமை) புரிந்துக்கொள்ளாமல் வாழ்ந்தனர். ஆகையால் மல்கியா தீர்க்கத்தரிசியின் வாயிலாக தேவன் அவர்களை மிகவும் கடுமையாக வாடி குற்றம் சாட்டுகிறார்.

**எரேமியா 9:8** “அவர்கள் நாவு கூர்மையாக்கப்பட்ட அம்பு, அது கபடம் பேசுகிறது; அவனவன் தன்தன் அயலானோடே தன் தன் வாயினாலே சமாதானமாய் பேசுகிறான்,” வெளிப்படையாக நன்றாக சிரித்து பேசிவிட்டு, உள்ளத்திலோ அவனுக்குப் பதிவிடை (தீங்கை) வைக்கின்றனர். ‘உள் ஒன்று வைத்து, புறம் ஒன்று பேசுவோர் உறவு கலவாமை’ என முதுமொழி சொல்லப்பட்டுள்ளது.

ஒருவரைப் பற்றி அவருக்கு முன்னும், அவருக்கு பின்னும் புரட்டி பேசுவது என்பது (Treachery) செயலாகும். இது சாத்தான் தந்திர வலையாகும். இது ‘சொல்வது ஒன்று, செய்வது ஒன்று’ என முரண்பாடாக செயல்படுவதாகும். இப்படிப்பட்டவர்களை விட்டுவிலகும்படி பவுல் தீமோத்தேயுவிற்கு எச்சரிக்கை கொடுக்கிறார்.

**2தீமோ 3:2–5** “... துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.”

அதே எச்சரிக்கை தீத்துவிற்கும் கொடுக்கப்பட்டது **தீத்து 1:16** “அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்படியாதவர்களும், எந்தநற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்.”

### ஆ) யூதர்களின் மாய்மால நடைமுறை, அவர்களின் பரிசுத்தத்தை அழித்துவிட்டது.

**மல்கியா 2:10–11** “நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்? யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது; கர்த்தர் சிநேகிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்த குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்.”

தேவனுடைய பிள்ளைகள், உலகத்தாரை மணப்பது என்பது அருவருப்பானதாகும், அது

தேவனுக்கு செய்கிற துரோகமாகவும் உள்ளது. மேலும், அது பரிசுத்தத்தை பரிசுத்தக் குலைச்சலாக்குவதாக இருக்கிறது. இஸ்ரவேலர்கள், இஸ்ரவேலரல்லாதவர்களை திருமணம் செய்ய நியாயப்பிரமாணத்தின்படி தடைச்செய்யப்பட்டது. **உபா 7:3** அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக. மேலும் அதின் அபாயங்களும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. **யாத் 34:16** "அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களைச் சோராமார்க்கமாய்ப் பின்பற்றுவதும் அல்லாமல், உன் குமாரரையும் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றும்படி செய்வார்கள்."

புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவின் இரத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்ட ஒருவர், இரட்சிக்கப்படாத ஒருவரை திருமணம் செய்வது என்பது தடை செய்யப்பட்டதாகவே இருக்கிறது **(கொரி 6:14–18).**

மாய்மாலம் என்பது கீழப்படிதலை எப்பொழுதும் தடுக்கின்றதாயிருக்கின்றது. **எசே 5:11** ஆதலால், சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான உன் கிரியைகளால் நீ என் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினபடியால் என் கண் உன்னைத் தப்பவிடாது, நான் உன்னைக் குறுகிப்போகப்பண்ணுவேன், நான் இரங்கமாட்டேன், இதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உறைக்கிறார். இயேசு இப்படிப்பட்ட செயல்களை செய்பவர்களை மிகவும் எதிர்த்தார் **மத் 23:13** மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிபோடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.

### இ) மாய்மால வாழ்வு தேவ தண்டனையை பெற்று தருகின்றது.

**மல்கியா 2:12–13** "இப்படிச் செய்கிறவன் எவனோ, அவன் காவல்காக்கிறவனாயினும், உத்தரவுகொடுக்கிறவனாயினும், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவாயினும், அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார். நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்; ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார்." இரட்டை மனம், மாய்மாலம், நடிப்பு, துன்மார்க்கம், எப்பொழுதுமே தேவ ஆசீர்வாதத்தை தடை செய்து, தேவ தண்டனையை வரவழைக்கிறது.

**கலா 6:7** மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். இயற்கையின் நியதியை பற்றி வேதாகமம் பேசுகிறது, மனிதன் எதை விதைக்கிறானோ அதை அறுப்பான். மாய்மாலத்தை, போலியை விதைப்பவர்கள் தண்டனையை அறுப்பார்கள்.

**ஏசாயா 29:13** "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்;அ வர்கள்இ ருதயமோ எனக்குத்தூ ரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது." தேவனுக்கு செலுத்த வேண்டிய கனத்திலும் போலியான தன்மை மிகவும் அருவருப்பானதாக இருக்கிறது. வார்த்தையிலே மரியாதை இருக்கிறது. ஆனால் அவர்கள் இருதயத்தில் தேவனுக்குரிய கனமும், தேவனைப் பற்றிய பயமும் இல்லை. இது எவ்வளவு வேதனைக்குரிய செயலாக இருக்கிறது.

உண்மையானவர்கள் தேவனாலே காக்கப்படுவது எவ்வளவு நிச்சயமான ஒன்றோ, அதேப்போல மாய்மாலக்காரர்கள் தண்டிக்கப்படுவதும் நிச்சயம். தேவன் மனிதனை தண்டிக்கும்படியாக படைக்கவில்லை என்றாலும், அவர்கள் தாங்கள் விதைத்த போலியான வாழ்வின் பலனை அனுபவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தங்களை தாங்களே தள்ளிக்கொள்கின்றனர். **ஓசியா 11:12** "எப்பிராயீமர் பொய்களினாலும், இஸ்ரவேல் வம்சத்தார் வஞ்சகத்தினாலும் என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; யூதாவோவெனில் இன்னும் தேவனோடே அரசாண்டு, பரிசுத்தவான்னளோடே உண்மையாயிருக்கிறான்."

ஆகையால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னை பின்பற்றுகிறவர்களை பார்த்து, மாயக்காரரை போல ஜெபம் பண்ணவேண்டாம் **(மத் 6:5–8),** மாயக்காரரை போல தர்மம் செய்ய வேண்டாம் **(மத் 6:1–4),** மாயக்காரரை போல உபவாசம் இருக்க வேண்டாம் **(மத் 6:16–18),** ஏனெனில் மாயக்காரர் அனைவருக்கும் ஐயோ! (பேராபத்து வருகிறது) என எச்சரித்தார். **மத் 23:14** "மாயக்காரராகிய வேதபாரகரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி,

விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்."

### ஈ) மாய்மாலக்காரர்களின் நிலைப்பாடு என்பது முட்டாள் தனமானதாகவும், அபத்தமானதாகவும் இருக்கிறது.

**மல் 2:10** நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்? வேத வசனம் மாய்மாலத்தின், நடிப்பின் அபத்தமான நிலையை வெளிப்படுத்துவதை கவனியுங்கள். நாம் ஆவிக்குரிய வகையில் சர்வ வல்ல தேவனுக்கும், சரீர ரீதியில் தேவனால் படைக்கப்பட்ட ஆதாமிற்கும் என ஒரே தகப்பனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். ஆகையால் துரோகத்தை தூரத்திவிடுவதற்கு பதில், அது இரகசியமாக இருக்கிறபடியினால் தொடர்கிறவர்களாக இருப்பது என்பது அபத்தமானதாக இருக்கிறது.

**ரோமர் 2:1** ''ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி. போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி. போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்." நான் ஒருவர் செய்த தவறை அவருக்கு உணர்த்தி அவரை குற்றவாளியாக தீர்க்கின்றேன். அதே தவறை நான் செய்யும் பட்சத்தில் நான் குற்றப்படுத்திய நபரோ, அல்லது மற்றவர்களோ அல்ல, என்னை நானே குற்றவாளியாக தீர்க்கிறேன். இங்கே பிரச்சனை மற்றவர் தவறை உணர்த்துவது அல்ல, அதே தவறை நான் செய்வது தான்.

குற்றத்தை உணர்த்துவது, அதாவது குற்றப்படுத்துவது எளிது, வாழ்வது மிகக்கடினம் என யாராவது சொன்னால், அது மிகவும் அபத்தமானதாகும். ஏனெனில் அவர்கள் அந்த குற்றத்தை செய்யாமல் இன்னும் வாழ பழகவில்லையே தவிர, அது கடினமான ஒன்றல்ல. இயேசு என் நுகம் இலகுவானது என்கிறார் **(மத் 11:28–30)**, பாவம் செய்யாமல் வாழ்வது என்பது சாத்தியமாகதான் இருக்கிறது. ஏனெனில் நாம் வாழ்கின்ற இந்த பாவ உலகில் அநேக தேவனுடைய பிள்ளைகள் வாழ்ந்து நமக்கு சாட்சிகளாக இருக்கின்றனர் **(எபி 11)**.

வெறும் இம்மைக்குரிய விசயங்களுக்காக மட்டுமே தேவனை சார்ந்திருத்தலும், தேவனை தேடுவதும் என்பதும் மிகவும் அபத்தமானதாகும். **ஓசியா 7:14,16** "அவர்கள் தங்கள் படுக்கையில் அலறுகிறபோது, தங்கள் இருதயத்தில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறதில்லை; அவர்கள் தானியத்துகாகவும் திராட்சரத்துக்காகவும் கூடுகிறார்கள்; என்னை வெறுத்து விலகிப்போகிறார்கள். திரும்புகிறார்கள், ஆனாலும் உன்னதமானவரிடத்திற்கு அல்ல; மோசம் போக்குகிற வில்லைப்போலிருக்கிறார்கள்; அவர்களுடைய அதிபதிகள் தங்கள் நாவினுடைய உக்கிரத்தினிமித்தம் பட்டயத்தால் விழுவார்கள்; இதுவே எகிப்துதேசத்தினிமித்தம் அவர்களுக்கு வரும் நிந்தை."

வனாந்தர பிராயணத்தில் இஸ்ரவேலர்கள் இப்படித்தான் இருந்தனர், தண்ணீர், சாப்பாடு என இம்மைக்குரிய காரியங்களுக்காக தேவனுக்கு எதிராக முறுமுறுக்கிறவர்களாக இருந்தனர். **(சங் 78:34–47)** இப்படிப்பட்ட நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. ஏனெனில் நம் உலகம் இது இல்லை, நம் சுதந்திரமும் இங்கில்லை. **1கொரி 15:19** ''இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்."

மனந்திரும்புதலில் நிலை நிற்க வேண்டும் மற்றும் கனிக்கொடுக்க வேண்டும் மாறாக பாவத்திற்கு மீண்டும் மீண்டும் திரும்புவது என்பதும் அபத்தமானதாகும். திருந்திவிட்டால் அதற்கு ஏற்ற வாழ்வை வாழ வேண்டும். பழைய வாழ்வை தொடரக்கூடாது. **மத்தேயு 3:8** "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்." நம்முடைய வாழ்க்கையினால், அதாவது நாம் வாழ்கின்ற முறையினால் தேவனுக்கு மகிமையை தர வேண்டும். **1 பேதுரு 4:15** எல்லாவற்றிலேயும், இயேசுகிறிஸ்து மூலமாய், தேவன் மகிமைப்படும்படி செய்வீர்களாக அவருக்கே மகிமை வல்லமை சதாகாலமும் ஆமென்.

# பாடம் : 6 - புதிய உடன் படிக்கையின் நடைமுறை பயன்பாடுகள்




நாம் பழைய உடன்படிக்கை அல்லது பழைய ஏற்பாடு நடுவிலிராதபடி எடுபட்டு போனது என்றும், நாம் இப்பொழுது புதிய உடன்படிக்கை அல்லது புதிய ஏற்பாட்டின் அதிகாரத்தின் கீழ் வாழ்கிறோம் என்றும் பார்த்தோம். நமது வாழ்க்கையில் இது என்ன பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது ? மார்க்க ரீதியான அநேக கருத்துக்கள் பழைய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருந்தும் புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் லாதனவைனளே பொதுவான கை கொள்ளப்படும் சில விஷயங்களை சுருக்கமாக பார்ப்போம்.

## ஓய்வுநாளில் ஆசரித்தல்

ஏழாம் நாள் அத்லெந்த் சபை எனும் கூட்டம் போன்ற சில மார்க்க குழுக்கள், நான்காவது கட்டளை இன்றும் அமலில் இருக்கிறது என்று நம்புகின்றன. **யாத்திராகமம் 20:8–11 ல்,** நாம் "ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளை நடப்பிப்பாயாக. ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும் உன் குமார்த்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல் களிலிருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்; ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்," என்று வாசிக்கிறோம். தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தபடியால் ஏழாம் நாளாகிய ஓய்வுநாளை சிருஷ்டிப்பின் நினைவாக ஏற்படுத்தினார் என்றும் இப்படியாக இன்றைக்கும் நாம் ஓய்வுநாளை கை கொண்டு ஆசரிக்க வேண்டுமென்றும் தர்க்கம் செய்கிறார்கள். ஓய்வுநாள் ஆசரிப்புக் கட்டளையும் கற்பலகையில் எழுதப்பட்டுக் கற்பலகையில் எழுதப்பட்டவைகளில் ஒன்று என்றும் பவுல் இந்த பிரமாணம் ஒழிந்து போகும் என்று திட்டவட்டமாக எழுதினார். "எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக் கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப் பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவனுடைய முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தது. ஒழிந்து போகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்திருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும் ? அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.'' **(2 கொரிந்தியர் 3:7,8, 11)** இப்படியாக ஓய்வுநாளை ஆசாரிக்கக் கொடுக்கபட்ட அதிகாரம் ஒழிந்து போயிற்று. ஓய்வுநாளை ஆசரிக்கும்படி கொடுக்கப்பட்ட கட்டளை சீனாய் மலையில் (இஸ்ரவேலர்) வந்து சேரும் வரை கொடுக்கப்படவில்லை, எனவே அதுவரை யாரும் ஓய்வு நாளை ஆசரிக்கவில்லை. "நீர் சீனாய் மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குச் செம்மையான நீதி நியாயங்களையும் நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர். உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, உமது தாசனாகிய மோசேயைக் கொண்டு, அவர்களுக்கு கற்பனைகளையும், நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தீர்" **(நெகேமியா 9: 13–14).** ஓய்வு நாள் பிரமாணம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே மூலமாக சீனாய் மலையில்தான் முதலாவதாக அறிவிக்கப்பட்டது என்பதை நெகேமியா சொல்லுகிறார். கூடுதல் தகவலாக, ஆதிக்கிறிஸ்தவ எழுத்துகளில் சபை வாரத்தின் முதல் நாளில் தான் ஆரம்பம் முதலே ஆராதனைக்கென்று கூடிவந்தார்கள் என்று நாம் அறிவோம்.

## இசைக்கருவி

பெரும்பாலான மார்க்க கூட்டத்தார் தங்களுடைய ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்துகின்றனர். புதிய ஏற்பாட்டில் இசைக்கருவி ஆராதனையில் பயன்படுத்தினதற்கான அதிகாரம் எதுவும் காணப்படவில்லை; மாறாக பாடும்படி மட்டுமே கட்டளையிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இசைக்கருவியைப் பயன்படுத்தும்படி கட்டளை கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதான், ஆகிலும் இன்றைக்கு நாம் கைகொள்ளும் காரியங்களுக்கு பழைய ஏற்பாடு அதிகாரமளிக்க முடியாது. வெளிப்படுத்தின விசேஷத்தில் எக்காளம், சுர மண்டலம் ஆகிய இசைக் கருவிகளின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன, ஆனால் அவைகள் தேவனை ஆராதிப்பதில் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடவில்லை. மேலும், வெளிப்படுத்தின விசேஷம் அடையாளங்களையும் உருவகங்களையும் கொண்ட

ஒரு புத்தகம். பரலோகம் என்பது ஆவிக்குரியதேயன்றி மாம்சப் பிரகாரமானதல்ல, இப்படியாக மாம்சப் பிரகாரமான இசைக்கருவி எப்படி ஆவிக்குரிய இடத்தில் இடம் பெறும்? நமது மார்க்கத்தில் புதிய ஏற்பாடுதான் அங்கீகாரமளிக்கும் அதிகாரத்தைப் பெற்றது, எனவே இதன் புத்தகங்களில் இசைக்கருவிகள் பயன்பாடு பற்றி எவ்விதக்குறிப்பும் இல்லை. கூடுதலாக, ஆதிச்சபை இசைக்கருவிகளை ஆராதனயில் பயன்படுத்தவில்லை.

தசம பாகம் செலுத்துதல்

அநேக மார்க்கக் கூட்டத்தார் தங்களுடைய அங்கத்தினர்களை தசமபாகம் செலுத்தும்படி கட்டளையிடுகின்றனர். ஒருவருடைய வருமானத்திலிருந்து தசமபாகம், அல்லது பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்டது. "தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசம பாக மெல்லாம் கர்த்தருக்குரியது; அது கர்த்தருக்கு பரிசுத்தமானது" **(லேவியராகமம் 27:30).** இஸ்ரவேல் புத்திரர் முறைப்படி செலுத்தவேண்டிய தசம பாகத்தை செலுத்தவில்லை; இருப்பினும், பழைய ஏற்பாட்டு செயல்களானதால், அநேகக் கூட்டதார் தாங்களும் தசமபாகம் செலுத்தக் கட்டளை பெற்றவர்கள் என்று நம்புகின்றனர், ஆனாலும் நாம் தசமபாகம் செலுத்த வேண்டுமென்று ஒரு இடத்தில் கூட கட்டளையிடப்படவில்லை. "நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" **(1கொரிந்தியர் 16:2).** இங்கே நாம் கொடுக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது, ஆகிலும் பவுல் நமது வரவுக்குத்க்கபட்டுள்ளது, ஆகிலும் பவுல் நமது வரவுக்குத்தக்கதாகக் கொடுக்கும்படி சொல்லுகிறார்; சரியான ஒரு தொகை குறிப்பிடப்படவில்லை. ஆகிலும், மிகக் குறைவாக நாம் கொடுத்தால் போதுமென்று பொருளல்ல, ஒரு குறைவான உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தவர்களாகிய இஸ்ரவேலர்களே தசமபாகம் செலுத்த வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தால், மிகச் சிறப்பான தொரு உடன்படிக்கையின் கழ் வாழ்கிற நாமனைவரும் நிச்சயமாக குறைந்தபட்சம் அந்த அளவாவது கொடுக்க வேண்டும் இப்படியாக, நாம் தசம பாகம் கொடுக்க வேண்டும் என்ற கட்டளை கொடுக்கப்படாதிருந்த போதிலும், தசமபாகம் என்பது நமது கொடுத்தலின் ஆரம்பம் மட்டுமே, முடிவு அல்ல. பவுல், கிறிஸ்தவர்கள் உற்சாகமாகக் கொடுக்க வேண்டுமென்றும், விசனமாயும் கட்டாயமாயுமல்ல என்றும் கட்டளையிட்டார் **(2 கொரிந்தியர் 9:7).** நாம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டால், பிறகு அது உற்சாகமாய் கொடுத்தலாகாது, மனப்பூர்வமாய்க் கொடுக்கப்படாத அந்தத் தருமப்பணம், எந்தவித ஆசீர்வாதத்தையும் கொண்டுவராது.

## தேவனிடத்தில் நேரடியாக ஜெபித்தல்

பழைய பிரமாணத்தின்கீழ், தேவனிடத்தில்ஆராதனையின் மூலம் கிட்டிச் சேரும் போது, ஒரு ஆசாரியின் மூலமே சேர வேண்டும். ஜனங்கள் கால் நடைகளை பலியிட்டனர், ஆனால் உண்மையில் அது ஆசாரியர்கள் தான் தூயவர்க்கமிட்டனர். இன்னொரு வார்த்தையில் சொன்னால், ஆசாரியன்தான் மனுஷனுக்கும் தேவனுக்கும் இடையில் நின்றான்.

இன்னொருபுறம் பார்த்தால், புதிய ஏற்பாட்டின் கீழ் மனுஷன் தேவனிடத்தில் கிட்டிச் சேர நமக்கு எந்த ஆசாரியன் மூலமாகவும் செல்ல வேண்டுவதில்லை, ஏனெனில் நாம் எல்லாருமே ஆசாரியர்கள்தான். நாம் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாய் ஆவிக்குரிய பலிகளைச் செலுத்துகிறவர்களாயிருக்கிறோம் **(1 பேதுரு 2:5).** நாம் கால்நடை பலிகளைச் செலுத்துகிறோம்."அப்படியிருக்கச் சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" விருத்த சேதனம். அல்லாமலும் நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து விட்டதினால், கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" **(கொலோசெயர் 2:11).** பவுல் இந்த விருத்தசேதனத்தை ஆவிக்குரிய விருத்த சேதனமாகவும் கைகளினால் செய்யப்படாததுமாக குறிப்பிட்ட பவுல், அது பழைய உடன்படிக்கையின் கீழ் கைகளினால் செய்யப்பட்ட மாம்ச விருத்தசேதனத்துக்கு முரணாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் மாம்சத்தின் பாவங்களை களைந்து போடுவதை அடையாளப் படுத்துகிறது. "உள்ளத்தில் யூதானானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல் ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே பிருத்த சேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி

மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது" **(ரோமர் 2:29).** மேலும், **கலாந்தியர் 5:6ல்** பவுல், "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்த சேதனமும் விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" என்று எழுதினார்.

இந்த (விருத்தசேதன) உடன்படிக்கையை சிலர் ஞானஸ்நானத்துடன் இணைத்துப் பேசுகின்றனர். ஆகிலும், பவுல் அப்படிச்சொல்லவில்லை. **கொலோசெயர் 2:12ல்,** "ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்து **(ரோமர் 12:1).** "ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" **(எபிரேயர் 13:15).** மீண்டும், நாம் பலி செலுத்துகிறோம், ஆனால் அந்த பலிகளெல்லாம் நம்மை நாமே செலுத்துவது. பழைய ஏற்பாட்டு ஆசாரித்துவம் தேவனுக்கு தூய வர்க்கமிடவேண்டும் என கட்டளையிடப்பட்டது **(யாத்திராகமம் 30:8).** இன்றைக்கு நாம் தூயவர்க்கமில்லாமலேயே செய்யும் ஜெபமாகும். "அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு முப்பர்களும் தங்கள் தங்கள் சுர மண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூயவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு, ஆட்டுக்குட்டியானவர்க்கு முன்பாக வணக்கமாய் விழுந்து'' **(வெளி 5:8).** இங்கே வலியுறுத்தப்படுவதெல்லாம் ஆவிக்குரிய தன்மையில் என்பதைக் கவனியுங்கள், நாம் தேவனுக்குச் செய்யும் இந்த ஆராதனையில், கூடுதலாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனிடத்தில் நேரடியாக சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

## விருத்தசேதனம்

மாம்ச விருத்த சேதனம் பழையஉடன் படிக்கையின் அடையாளம். ஒவ்வொரு யூத மார்க்கத்து ஆண்பிள்ளையும் சரீரத்தில் பெறும் விருத்தசேதனம் தேவனோடு உறவுமுறைகொள்ளும் உடன்படிக்கையின் அடையாளம். கிறிஸ்தவர்களுக்கும் ஒரு விருத்தசேதனமுண்டு, ஆனால் அது ஆவிக்குரிய, இருதயத்தில் உண்டாகும்

60 Number Page Missing

தவர்களாகவும் இருக்கிறீர்கள்''. நாம் ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்படும்போது இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் இடம் பெறுகிறது. இப்படியாக நாம் பெறும் ஞானஸ்நானம் விருத்த சேதனமல்ல; மாறாக நமது பாவங்களை மன்னிபதன் மூலம் அந்த நேரத்தில்தான் தேவன் ஆவிக்குரிய முறையில் விருத்த சேதனம் செய்கிறார். ஞானஸ்நானம் ஒருபோதும் புதிய உடன்படிக்கைக்கு முத்திரையாக அல்லது அடையாளமாகச் சொல்லப்படவில்லை. மாறாக, பரிசுத்த ஆவியே நமக்கு முத்திரையாகச் கொடுக்கப்பட்டுள்ளது, **(எபேசியர் 4:30).**

## முடிவுரை

இன்று அதிகாரமளிக்கப்படாத நிலையில் மார்க்கத்தில் கைகொள்ளப்படுகிற அநேகக் காரியங்களைச் சுருக்கமாக நாம் பார்த்தோம் ஒரு பெரிய அளவில், ஜனங்கள் உடன்படிக்கைகளுக்கிடையே காணுகிற வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாததால் வருகிற காரியங்கள். பழைய ஏற்பாட்டில் கை கொள்ளப்பட்ட சில விஷயங்களை இன்றைக்கு நாம் கை கொள்ளுவதில்லை. நாம் தேவனுக்குச் செய்யும் சேவையில் கை கொள்ளும் காரியங்களுக்கு எந்த அதிகாரத்தில் செய்யப்படுகிறது என்பதைக் காணவேண்டும்; எப்படியாயினும், அந்த அதிகாரம் புதிய உடன்படிக்கையில் அல்லது புதிய ஏற்பாட்டில் காணுகிறது. இந்தக் கல்விமுறையில் உடன்படிக்கைகளுக்கிடையேயான வித்தியாசங்களைப் புரிந்துகொள்ள உதவியாயிருந்திருக்குமென்று, நம்புகிறோம், இப்படி தேவனுடைய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்பார்க்க நம்மை அனுமதித்துள்ளது **(2 தீமோத்தேயு 2:15).**

# தொடர் 23 சிறிய தீர்க்கதரிசிகள்: பெரிய செய்தியைக் கொண்ட சிறிய புத்தகங்கள்

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் : 1-3; யோவேல் 1, 2; ஆமோஸ் 3,4; 1, 3; ஆகாய் 1, 2; சகரியா 7,8; மல்கியா 1,4.

## சிறிய தீர்க்கதரிசிகள்

பழைய ஏற்பாட்டில் உள்ள கடைசி பன்னிரெண்டு புத்தகங்கள் ''சிறிய தீர்க்கத்தரிசிகள்'' என்று அழைக்கப்படுகின்றன. எபிரெய வேதாகமத்தில் இவைகள் ஒரே புத்தகமாக இணைக்கப்பட்டிருந்தன. முக்கியமானவையல்ல என்பதால் இவைகள் "சிறிய" என்று அழைக்கப்படுவதில்லை; மாறாக, இவைகள் "பெரிய தீர்க்கதரிசிகள்" புத்தகங்களைக் காட்டிலும் சிறியவைகளாய் இருக்கின்றன என்பதால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன. இப்புத்தகங்களில் சில ஆட்சியாளர்களைக் குறிப்பிடுகின்றன; இது அந்த மனிதர்கள் ஆண்டகாலங்களின்போது இருந்த ஆவிக்குரிய சூழ்நிலையை நீங்கள்புரிந்துகொள்ள உதவும். சில புத்தகங்கள் தேதியிடப்படாதிருப்பதால், அவைகள் எப்போது எழுதப் பட்டன என்று நாம் மிகச்சரியாகக் கூற இயலாது. இருப்பினும், தேதியிடப்பட்ட எல்லாப் புத்தகங்களும் நாள்வரிசைமுறையின்படி அடுக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனியுங்கள். தேதியுடப்பட்டுள்ள புத்தகமும் எழுதப்பட்ட காலங்களுக்கு இடைப்பட்ட வேளையில் எழுதப்பட்டிருக்கும் என்று நினைப்பது தீமை எதையும் செய்வதில்லை.

## ஓசியா

"ஓசியா" என்றால் "இரட்சிப்பு" அல்லது "விடுதலை" என்று அர்த்தமாகிறது. ஓசியா இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் ஊழியம் செய்தார் (7:5), இவரது ஊழியக்காலம் யெரொபெயாம் அரசரின் ஆளுகையின் நாட்களில் இருந்து தொடங்கிற்று. அவர் தெற்கு ராஜ்யமான யூதாவில் ஊழியம் செய்த ஏசாயாவின் காலத்தில் வாழ்ந்திருந்தார் (1:7). 1-3 அதிகாரங்கள் இப்புத்தகத்தின் திறவுகோலாய் இருகின்றன. இவைகள் ஓசியாவின் மனைவியான கோமேர் என்பவளிடத்தில் இருந்த உண்மையற்றத்தன்மை பற்றியும் அவள் தொடர்ந்து ஓசியாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றியும் கூறுகின்றன. கோமேர் என்பவள் இஸ்ரவேல் நாட்டின் மாதிரியாய் இருக்கின்றாள்; ஓசியா தேவனுக்குமாதிரியாய் இருக்கின்றார். தேவனுடைய மக்கள் புறம்பே சென்றபோதிலும், தேவன் அவர்கள்மீது அன்புகூருகின்றார் மற்றும் அவர்கள் திரும்பவேண்டும் என்று ஏங்குகின்றார் என்பதே செய்தியாக உள்ளது. ஓசியா 11:1 வசனம் மத்தேயு 2:15ல் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது.

## யோவேல்

"யோவேல்" என்றால் "யெகோவா தேவன்" என்று அர்த்தமாகிறது யோவேல் தெற்கு ராஜ்யத்தில் ஊழியம் செய்தார். அவர் வெட்டுக்கிளிகளின் வாதையைச் சித்தரித்தார் (அனேகமாக, இது நேரடியாகவே வந்தது; ஆமோஸ் 4:9ஐக் காணவும்). வெட்டுக்கிளிகள் என்பவை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் அடையாளத்துவமாய் இருக்கின்றன. வெட்டுக்கிளிகளின் உருவகம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பிரதிபலிக்கப்படுகிறது **(9:1-11).** யோவேல் **2:28-32** வசனங்கள் பேதுருவினால் நடபடிகள் **2:16-21ல்** மேற்கோள் காண்பிக்கப்படுகிறது.

## ஆமோஸ்

"ஆமோஸ்" என்றால் "சுமை சுமைப்பவர்" என்று அர்த்தமாகிறது. வாழ்வின் ஊழியம் என்ற வகையில் அவர் ஒரு தீர்க்கதரிசியுமல்ல, ஒரு தீர்க்கதரிசியின் மகனுமல்ல, ஆனால் அவர் ஒரு விவாசாயியாக இருந்தார் (1:1; 7:14). யூதாவின் அரசரான உசியா மற்றும் யெரொபெயாம் ஆகியோரின் நாட்களில் தேவன், ஆமோஸை தெற்கு ராஜ்யத்தில் இருந்த அவரது இல்லத்தில் இருந்து அழைத்து (1:1), தீர்க்கதரிசனம் உரைப்பதற்காக வடக்கு ராஜ்யத்திற்குச் சென்று (7:15). அவர் வடக்கு ராஜ்யத்திற்குச் சென்று (7:10, 13), இஸ்ரவேல் மக்களுக்கு எதிரான நியாயத் தீர்ப்புபற்றிய தேவனுடைய செய்தியைப் பேசி, பின்பு தமது இல்லம் திரும்பினார்.

## ஒபதியா

''ஒபதியா'' என்றால் ''யெகோவாவின் ஊழியக்காரன்" என்று அர்த்தப்படுகிறது. இது பழைய

ஏற்பாட்டிலேயே மிகச்சிறு புத்தகமாக உள்ளது. ஒபதியாவின் செய்தியானது அடிப்படையில், ஏசாவினுடைய சந்ததியாரான ஏதோமியர்களுக்கு எதிரானதாகும் (ஆதியாகமம் 25:30; 36:1). அவர்களின் வரலாறு முழுவதிலும் இஸ்ரவேல் மக்களும் ஏதோமியர்களும் ஒருவர் மற்றவர்மீது வெறுப்புணர்வு கொண்டிருந்தனர். எருசலேம் அழிக்கப்பட்ட போது ஏதோமியர்களின் நடவடிக்கை கடைசி அடியாக இருந்தது (வசனங்கள் 10-14).

### யோனா

"யோனா" என்றால் "புறா" என்று அர்த்தப்படுகிறது. யோனா வடக்கு ராஜ்யத்தில் யெரொபெயாமின் நாட்களில் வாழ்ந்து ஊழியம் செய்தார் (2 இராஜாக்கள் 14:25). அவர் அந்தப்பகுதியில் எலியா மற்றும் எலிசா ஆகியோரின் ஊழியத்தைப் பின்தொடர்ந்தார். அவரிடம் தேவன், அசீரியாரின் தலைநகரான நினிவே என்ற பட்டணத்துக்குப் பிரசங்கிக்கும்படி கூறினார், அந்த நகரம் சில ஆண்டுகளுக்குப்பின்பு வடக்கு ராஜ்யத்தை அழித்தது. பெரிய மீனின் வயிற்றுக்குள் யோனாவின் அனுபவம் என்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்மாதிரியாக உள்ளது (மத்தேயு 12:39, 40).

### மீகா

"மீகா" என்றால் "யெகோவைப் போன்றவர் யார்?" என்று அர்த்தப்படுகிறது. மீகா தெற்கு ராஜ்யத்தில் யோத்தாம், ஆகாஸ் மற்றும் எசேக்கியா ஆகியோரின் ஆளுகைகளின்போது வாழ்ந்தார் (1 : 1). அவர் ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்தவராய் இருந்தார். அவர் தமது செய்தியை வடக்கு ராஜ்யமான இஸ்ரவேலுக்கும் தெற்கு ராஜ்யமான யூதாவுக்கும் உரைத்த ஒரே ஒரு சிறிய தீர்க்கதரிசியாக இருக்கின்றார் (1:5). அவர் சிறையிருப்பிலிருந்து திரும்பிவருதலையும் (2:12, 13), இயேசுவின் பிறப்பையும் (5:2), மற்றும் சபை நிலைநாட்டப்படுதலையும் (4:1-4) முன்னோக்கினார்.

### நாகூம்

"நாகூம்" என்றால் "தேற்றுதல்" அல்லது "ஆறுதல் கூறுபவர்" என்று அர்த்தப்படுகிறது. நாகூம் என்பவரின் செய்தியானது யூதர்களுக்குத் தேறுதல் அளிக்கும் ஒரு செய்தியாய் இருந்தது, அதாவது, அவர்களின் மிகமோசமான விரோதியான அசீரியா அழிக்கப்படவிருந்தது என்பதே அச்செய்தியாகும். அவர் அசீரியாவின் தலைநகரான நினிவேயில் யோனாவின் பிரசங்கம் மனம் வருந்துதலை ஏற்படுத்தியதற்குப்பின்பு நூறு ஆண்டுகளுக்கும் சற்று அதிகமான காலம் கடந்தபிற்பாடு ஊழியம் செய்தார். நாகூமுடைய நாட்களில், தேவனுடைய பொறுமை எல்லை கடந்துவிட்டது.

### ஆபகூக்

